முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 22.01.2026

O.S. No. 301/2014

பிவா,சா-1 நைனார் ஆசாரி

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

பிவாசாஆ 20 ஆவணத்தை 05.10.2013 ல் வாங்கி காலதாமதமாக தற்போது தாக்கல் செய்வதற்கு காரணம் என்னவென்றால் நான் எனது முந்தைய வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டேன். அவர் தாக்கல் செய்யாமல் விட்டுவிட்டார் தற்போதைய வழக்கறிஞரிடம் எடுத்து சொல்லி தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கின் 1, 2 பிரதிகள் POP எண் 32/1996 மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. அந்த மனுவில் இந்த வழக்கின் வாதிகள் தாக்கல் செய்யவில்லை என்றாலும் தரப்பினர்கள் இல்லை என்றாலும் சரி. இந்த வழக்கின் வாதிகள் POP எண் 32/1996 ல் 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் என்றால் சரி. POP எண் 32/1996 என்ற மனுவானது வழக்கு நடத்த போதிய வருமானம் இல்லை என்று அனுமதி வழங்கி வழக்கு நடத்துவதற்கான முன்மனு என்றால் சரி.

POP எண். 32/1996 வழக்கு விசாரணையே செய்யப்படாமல் 27.06.2001 ல் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. தள்ளுபடி செய்யப்பட்டதால் பாக வழக்கு நிலுவையில் இல்லை என்றால் சரி. 2 பக்கமும் விசாரணை செய்யப்பட்ட தீர்ப்பு இல்லை என்றாலும் ஒருதலைபட்சமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவு என்றாலும் சரி. POP எண். 32/1996 வழக்கில் நான் எதிர் உரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்திருப்பேன் அதனை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் பழைய வக்கீலிடம் கொடுத்துள்ளேன். அதனை திருப்பி வாங்க வில்லை.,

POP எண் 32/1996 மனு நகல் என்ன ஆனது என்றால் எனது பழைய வழக்கறிஞரிடம் கேட்க வேண்டும். மனு தள்ளுபடி செய்யப்பட்டதில் அதன் பின்பாக அதில் நான் எதிர் கோரிக்கை வைத்து மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிவாசாஆ 20 ஆவணம் வாதிகளின் பாக உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.